# செய்தி வெளியீடு

**இலங்கையின் பொருளாதாரம் 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது**

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்
## 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-11-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk

..................................................................................................................................................

இலங்கையின், 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான (ஜூலை, ஆகஸ்ட், செப்டெம்பர்) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி(மொ.உ.உ), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிட்ட அறிவிப்பின்படி, தேசிய கணக்குகள் மதிப்பீடுகளுக்கான 2018 ஆம் மூன்றாம் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதமானது 2.9 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் நிலையான (2010) விலையில் 2,431,627 ரூபா மில்லியன்களாக அதிகரித்ததாக பதிவு செய்ததுடன், இது 2017 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2,362,698 ரூபா மில்லியன்களாகும்.

பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்குகளை முறையே 7.5 சதவீத**,** 27.4 சதவீத**,** 56.8 சதவீத மற்றும் 8.3 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளன.

2017 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பதிவான 3.0 சதவீத சுருக்கத்தை ஒப்பிடும்போது விவசாயப் பணிகள் இக் காலாண்டில் 3.3 சதவீதத்தால் சாதகமாக விரிவடைந்தது. 2017 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில்**,** 2018 ஆம் மூன்றாம் காலாண்டின் கைத்தொழில் நடவடிக்கைகள் 1.9 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை காட்டியுள்ளது. சேவை நடவடிக்கைகள் மேலும் 3.9 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது**.**

விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், **'**நெல் வளர்ச்சி**'** 2017 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 32.8 சதவீத மறை வளர்ச்சி வீதத்தை பதிவு செய்ததுடன்**,** இக் காலப் பகுதியில் 46.9 சதவீத முனைப்பான நேர் வளர்ச்சி வீதத்தை காட்டியுள்ளது**.** மேலும் 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக', 'தானியங்களின் வளர்ச்சி**',** 'காய்கறிகளின் வளர்ச்சி**',** 'இறப்பர் வளர்ச்சி'**,** 'கால்நடை உற்பத்தி'**,** 'பழங்களின் வளர்ச்சி', **'**வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி**'** என்பன முறையே 11.9 சதவீத**,** 10.6 சதவீத**,** 9.9 சதவீத**,** 5.2 சதவீத**,** 5.1 சதவீத**,** 4.0 சதவீத மற்றும் 3.1 சதவீதத்தால் கணிசமான நிலையில் விரிவடைந்துள்ளது. உப பிரிவுகளான 'நன்னீர் மீன்பிடி' மற்றும் 'தேயிலை வளர்ச்சி' என்பன முறையே 19.1 சதவீத , 14.9 சதவீத கணிசமான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளன.

கைத்தொழில் துறை நடப்பு விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 27.4 சதவீத பங்களிப்பை செய்ததுடன், மேலும் 1.9 சதவீதத்தாலும் விரிவடைந்துள்ளது. மொத்த உற்பத்தி நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2.2 சதவீதத்தால் மேலும் விரிவடைந்திருப்பதுடன், 'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி' மற்றும் 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி', நடவடிக்கைகள் முறையே 3.7 சதவீத, 3.2 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களால் ஆதரவளித்துள்ளன. மேலும் 'நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்களின் உற்பத்தி' மற்றும் 'ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள்', நடவடிக்கைகள் முறையே 16.7 சதவீத மற்றும் 3.9 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களால் பிரதானமாக ஆதரவளித்துள்ளன. எவ்வாறினும் 'பலகை மற்றும் பலகைப் பொருட்கள் உற்பத்தி' மற்றும் கடுதாசிப் பொருட்கள் உற்பத்தி' நடவடிக்கைகள் முறையே இக் காலப் பகுதியில், 13.1 சதவீத மற்றும் 7.5 சதவீத மறை வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

கைத்தொழில் பிரிவுகளுக்கிடையில் 'மின்சாரம்,வாயு,நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் ', 'நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' என்பன முறையே 3.3 சதவீத மற்றும் 5.0 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. அதே வேளை 'சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்' 2.2 சதவீதத்தால் வீழ்ச்சியை காட்டுகின்றது. 2017 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், இக் காலப் பகுதியில் கைத்தொழில் துறையின் இரண்டாவது உயர் பங்களிப்பாளரான (7.0 சதவீத) 'கட்டிடவாக்கச் செயற்பாடுகள்' வளர்ச்சியான 2.5 சதவீதத்தையே காட்டுகின்றது.

2017 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 56.8 சதவீதத்தை வழங்கும், மூன்று பிரதான துறையின், சேவைத் துறையின் நடவடிக்கைகள் 3.9 சதவீதத்தால் விரிவை பதிவு செய்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது, இச் சேவைத்துறையின் உப நடவடிக்கைகளான 'தொலைத்தொடர்புகள் பணிகள்', 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', காப்புறிதி செயற்பாடுகள்', 'தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள்', 'மனித நல நடவடிக்கைகள்', 'தங்குமிடம் உணவு மற்றும் குடிபானப் பணிகள்', 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்', மற்றும் 'ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகள்' என்பவற்றின் செயல்பாடுகளால் இக்காலாண்டு முறையே 14.8 சதவீத 12.4 சதவீத 8.3 சதவீத, 7.5 சதவீத, 5.7 சதவீத, 5.4 சதவீத, 5.0 சதவீத, மற்றும் 4.8 சதவீதங்களால் விரிவடைந்து வலுத்துள்ளது. இக் கால இடைவெளியில் 'நிகழ்ச்சித் திட்டமிடல் மற்றும் ஒலிபரப்புச் செயற்பாடுகள்', 'பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து' 9.0 மற்றும் 0.7 சதவீத கணிசமான சுருக்கத்தையும் காட்டுகிறது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2018 ஆம் மூன்றாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (**www.statistics.gov.lk**)

திருமதி. ஐ.ஆர். பண்டார

பதில் பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்